
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1241**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே


**நீரை.மகேந்திரன்**

**165**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த டி.எம்.பார்த்தசாரதி அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# டி.எம்.பார்த்தசாரதி இயக்க வளர்ச்சியின் விதை!

ஓவியம் : ரவி பேலட்



“இடுக்கண் வளர்ந்து நெருக்கும்போது எவருக்கும் தாம் இருக்கும் இடம் - செய்யும் பணி - ஈடுபட்டுள்ள இயக்கம் - தொடர்பு கொண்டுள்ள தோழர்கள் - எனும் இவை பற்றியெல்லாம் ஐயப்பாடு, கோபம், அருவருப்பு, அச்சம், சலிப்பு - இவை மூளும். எப்படி என் நண்பர் பார்த்தசாரதி பல தொல்லைகளைத் தாங்கித் தத்தளித்த நிலையிலேயும், ஆற அமர உட்கார்ந்து அரும்பாடுபட்டு சேதிகளைச் சேகரித்து - முறையாகத் தொகுத்து ஏடு ஆக்கினார் என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது” என்று பேரறிஞர் அண்ணா நற்சான்று அளித்த அவரது நெருங்கிய நண்பர், டி.எம்.பார்த்தசாரதி. அந்த நூல்: ‘தி.மு.க. வரலாறு’. கழகத்தின் ஆரம்பகாலத் தலைவர்களில் ஒருவர், கழக வரலாற்றை ஆவணப்படுத்தி எழுதிய மூத்த எழுத்தாளர்.

1949-ஆம் ஆண்டு, கழகம் தொடங்கப்பட்ட காலம் தொடங்கி, கட்சியின் வளர்ச்சி, மாநாடுகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளை விரிவாகக் கூறும் ‘தி.மு.க. வரலாறு’ என்கிற நூல், பேரறிஞர் அண்ணா அவர்களால் வெளியிடப்பட்டு, இன்றும் கழக அரசியல் வரலாற்றின் முக்கிய ஆவணமாக உள்ளது.

### முதல் மேடையில் முதல் குரல்

1949 செப்டம்பர் 18-இல் கழகத்தின் தொடக்கத்தை அறிவிக்கும் முதல் பொதுக் கூட்டத்தில், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களை கூட்டத்துக்கு தலைமை வகிக்கும்படி அழைத்த தலைவர் டி.எம். பார்த்தசாரதி. அந்த மேடையில் பேரறிஞர் அண்ணாவுடன் இடம்பெற்ற அன்பு உடன்பிறப்பு.

1949-இல் அறிவிக்கப்பட்டு, 1952 டிசம்பர் வரையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிர்வாகிகள் பட்டியலில், முதல் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராக இடம்பெற்றவர்.

1906-ஆம் ஆண்டில் பிறந்தவர் பார்த்தசாரதி. 25 வயதிலேயே பெரியார் சுயமரியாதை பிரச்சாரத்தில் பற்றுக்கொண்டு ஈடுபடத் தொடங்கியுள்ளார். வில்லிவாக்கத்தில் வசித்துவந்துள்ளார். 1940 ஆண்டுகளில், பெரியார் சுயமரியாதை கருத்துகளைத் தாங்கி, தமிழ் உலகம் என்கிற இதழை நடத்தி இருக்கிறார். 1931-ஆம் ஆண்டிலேயே வில்லிவாக்கம் சமதர்ம சங்கத்தில் கலந்து கொண்டு பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்துள்ளார். 1947-ஆம் ஆண்டுகளில் வில்லிவாக்கம் திராவிடர் கழகத்தின் முக்கிய பொறுப்பாளராக இருந்து வழி நடத்தி இருக்கிறார்.

சுயமரியாதை இயக்கக்காலம் தொட்டே அண்ணாவுடன் நெருங்கி பயணித்தவர். அண்ணா சென்னை வந்தால், அவரை சந்திக்கும் நெருங்கிய நட்பு வட்டத்தில் இருந்த நண்பர். அந்த நட்பும் தோழமையும்தான் தி.மு.கழகம் தொடங்கப் படுவதற்கு முன்பாக அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு ‘மாலை மணி’ நாளிதழைத் தொடங்கவைத்தது.

### கழகத்தின் முதல் பத்திரிகை

திராவிடர் கழகத்திலிருந்து பேரறிஞர் அண்ணா பிரிந்து, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கும்போது, கழகத்திற்கு என ஒரு நாளேடு இல்லையே என நினைத்தபோது, அந்தக் குறையைப் போக்கும் வகையில் தொடங்கப்பட்ட நாளிதழ் தான் ‘மாலை மணி’. கழகம் தொடங்குவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பு அந்த நாளிதழ் தொடங்கப்பட்டது. பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார் அண்ணா. அந்த நாளேட்டினைத் தொடங்கி, அண்ணாவின் எண்ணத்தை நிறைவேற்றியவர், பார்த்தசாரதி. சென்னை மண்ணடி முத்துமாரி செட்டித் தெரு என்ற முகவரியிலிருந்து ‘மாலை மணி’ வெளிவந்தது.

பொருளாதாரத் தட்டுப்பாடு காரணமாக ஓராண்டுக் காலத்திற்குள் நிறுத்தும் நிலை ஏற்பட்டாலும், கழகத்தின் ஓராண்டு வளர்ச்சிக்கு பெரும் ஊட்டம் அளித்தது மாலை மணி. மாலை மணி இதழ் நின்றாலும் அண்ணாவின் எண்ணத்தை ஈடேற்ற அடுத்த முயற்சிகள் எடுப்பதையும் அவர் நிறுத்தவில்லை. கழகத்தினர் நாடகங்களை நடத்தி, நிதி திரட்டி, 1953-ஆம் ஆண்டிலிருந்து, கழகத்தின் அதிகாரபூர்வ ஏடாக அறிவகத்திலிருந்து ‘நம் நாடு’ இதழ் தொடங்கப்பட்டது. அச்சகத்திற்கு ‘அழகிரி அச்சகம்’ என்று பெயர் வைக்கப்பட்டது. அந்த அச்சகம் சீராக செயல்படவும் பாடுபட்டவர் பார்த்தசாரதி.

### தி.மு.க. வரலாறு

1961-ஆம் ஆண்டு வெளியான தி.மு.க. வரலாறு நூலுக்கு வாழ்த்துரை அளித்த பேரறிஞர் அண்ணா, பார்த்தசாரதி அவர்களின் முயற்சியைப் புகழ்ந்திருப்பார். ‘என் நண்பர் டி.எம்.பார்த்தசாரதி அவர்கள் இந்த அரிய நூலை வெளியிடுகிறார். நல்ல முயற்சி - நாட்டுக்குத் தேவையான பணி. நண்பர் பார்த்தசாரதி என்னுடனிருந்து பணியாற்றி’ வருவதாலும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்திலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள், எழுச்சிகள் ஆகியவைகளை அறிந்திருப்பதாலும், இத்தகைய நூல் தீட்ட முடிகிறது - பாராட்டுகிறேன். நண்பர் டி.எம்.பார்த்தசாரதி, இன்னல்களுக்கு இடையிலேயே எப்போதும் இருந்திருந்து பழகிப்போனவர் - தழும்பேறிப்போன நிலை. ‘தி.மு.க. வரலாறு’ இன்றைய தேவையை ஈடேற்றிவைக்கும் ஒரு நல்ல முயற்சி. இம்முயற்சியில் வெற்றி கண்ட நண்பர் பார்த்தசாரதியைப் பாராட்டுகிறேன். இல்லந்தோறும் இந்த ஏடு இருந்திட வேண்டுமென விழைகிறேன்’ என அன்று பேரறிஞர் அண்ணா பெருமையுடன் குறிப்பிட்டார்.

1964-ஆம் ஆண்டில் சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு, பேரறிஞர் அண்ணாவுடன் சிறைவாசம் கண்டவர். சிறையில் அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனை கொண்டுசென்ற நிலையில், ‘அன்றிரவு எனக்கு தூக்கமே வரவில்லை’ என அண்ணா தனது கவலையைப் பகிர்ந்துள்ளார்.

“வயது 60. எப்போதும் சுறுசுறுப்பாக வேலை செய்தபடி இருப்பது வாடிக்கை. நான் தடுத்தாலும், எந்த வேலையையும் அவரே செய்வார். வேலைகளைச் செய்யக்கூடிய வலிவு இல்லையென்றாலும், அதை உணர்ந்து கொள்ள மாட்டார்” என்று குறிப்பிட்டுள்ளதுடன், “சிகிச்சைக்குப் பின்னர் சிறை திரும்பியவரை வேலை செய்ய வேண்டாம் எனத் தடுத்தும், அவரால் வேலை செய்யாமல் இருக்க முடியவில்லை” என்று தனது நாட்குறிப்பு கடிதத்தில் எழுதி இருக்கிறார்.

### மணிவிழா மகுடம்

1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், டி.எம்.பார்த்தசாரதி அவர்களுக்கான மணிவிழா, கழகத்தின் சார்பில் கோடம்பாக்கத்தில் நடத்தப்பட்டு, அவருக்கு ரூ.16 ஆயிரம் பண முடிப்பு வழங்கினார் பேரறிஞர் அண்ணா. என்.வி.நடராசன், கலைஞர், நாஞ்சில் மனோகரன், மதியழகன், மேயர் மோசஸ் எனப் பல முன்னோடிகளும் கலந்துகொண்டு அவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டியுள்ளனர். திறமைமிக்க நண்பர் என முத்தமிழறிஞர் கலைஞர் புகழ்ந்துள்ளார்.

டி.எம்.பார்த்தசாரதியின் மணிவிழாவில் பேசிய அண்ணா, ‘இயக்க வளர்ச்சிக்கு உழைத்தோர், பயிருக்கு விதை போன்றோர்’ எனக் குறிப்பிட்டார். உண்மைதான் டி.எம்.பார்த்தசாரதி எழுதிய தி.மு.க. வரலாறு வரலாற்று ஆவணம். அந்த ஆவணம் என்றும் நம் இல்லங்களில் இருக்கும். அவர் நினைவுகளே விதைகள். ஆயிரமாயிரமாக முளைத்து செழிக்கும்.

> **டி.எம்.பார்த்தசாரதியின் மணிவிழாவில் பேசிய பேரறிஞர் அண்ணா, “இயக்க வளர்ச்சிக்கு உழைத்தோர், பயிருக்கு விதை போன்றோர்” எனக் குறிப்பிட்டார்.**

...துடிக்கும்

## முதலமைச்சர் உளறலாமா?

தமிழ்நாட்டில் போதைப்பொருள் நடமாட்டம் தாறுமாறாக பரவிக்கிடக்கிறது என்று, சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் பேசியதற்கு, எந்த ஆதாரங்களின் அடிப்படையில் இப்படியொரு ஒப்புதல் வாக்குமூலத்தை, சட்டப்பேரவையில் பதிவு செய்தார்? என்று கேள்வி எழுப்பி இருக்கிறார், பத்திரிகையாளர் அரவிந்தாக்ஷன். அவரது முகநூல் பதிவில்,

“மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரப் பகிர்வுத் துறை அமைச்சகம், ‘Magnitude of Substance Use in India’ என்ற தலைப்பில், ஆய்வறிக்கையை வெளியிடுகிறது. அதன்படி, தமிழகத்தில் கஞ்சா பயன்பாடு 0.1 சதவிகிதம், ஓபியாய்ட்ஸ் 0.26 சதவிகிதம், மயக்க மருந்துகள் 0.3 சதவிகிதம், உள்ளிழுக்கும் மருந்துகள் 0.2 சதவிகிதம் மட்டுமே. இவை அனைத்தும் தேசிய சராசரியைவிட மிகக் குறைவு.

தமிழ்நாட்டில் போதைப்பொருள் பயன்பாடும் புழக்கமும் இல்லை என்று கூறவில்லை, இருக்கிறது. ஆனால்,போதைப் பொருள்களைக் குறைவாக நுகரும் மாநிலமாகவே தமிழ்நாடு எப்போதும் இருக்கிறது.

குறிப்பாக, தொழில்முறையாக கஞ்சா பயிரிடுவது, காவல் துறையின் நடவடிக்கையால் தமிழகத்தில் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டது.

மேலே கூறப்பட்டுள்ள தரவுகள் அனைத்தும் National Drug Dependence Treatment Centre (NDDTC), All India Institute of Medical Sciences (AIIMS) இணைந்து நடத்திய ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ள விவரங்கள். ஆனால், தமிழ்நாட்டில் தாறுமாறாக போதைப்பொருள் பரவியுள்ளது என முதலமைச்சர் விஜய் சட்டமன்றத்தில் கூறியது, எந்தத் தரவுகளின் அடிப்படையில்?

எந்த ஆதாரங்களும்/தரவுகளும் இல்லாமல் முதலமைச்சரே மாநிலத்தை கேவலப்படுத்தி இருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை எதிர்க்கட்சிகள் வைத்தாலும், தமிழ்நாடு அரசு மறுக்க வேண்டும். ஆனால், விஜய் இந்த விஷயங்களைப் பேசும்போது அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் சபாநாயகரும் ரசிக்கின்றனர்.

உண்மையில் மிகவும் வருத்தமாக உள்ளது” என்று குறிப்பிட்டுள்ள அவர், “முதலமைச்சர் பொறுப்பில் இருப்பவர், வாய்க்கு வந்ததை சட்டப்பேரவையில் பொதுவாகக் கூறிச்செல்வது கொஞ்சமும் சரியல்ல” என்று சில கேள்விகளுடன் விமர்சனத்தை வைத்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





முனைவர் கடவூர் மணிமாறன்

### உலகத் தமிழ்க்கவிஞர் மாநாட்டில் முத்தமிழறிஞர்!

1990 ஜூலை மாதம் 16, 17 ஆகிய இரண்டு நாட்கள், கிருஷ்ணகிரியில் உவமைக் கவிஞர் சுரதா ஏற்பாட்டில் உலகத் தமிழ்க்கவிஞர் பேரவை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் 100 கவிஞர்களுக்கு ‘கவிமாமணி’ விருதை வழங்கினார், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர். அவர் முன்னிலையில் நடைபெற்ற கவிதைப் பட்டிமன்றத்தில் நானும் பங்கேற்றேன். கலைஞருடன் மேடையில், (புகைப்படத்தின் இடப்பக்கத்திலிருந்து) நானும், அன்றைய மாவட்ட ஆட்சியர் அலாவுதீன், கவிஞர் நன்னியூர் நாவரசன், உவமைக் கவிஞர் சுரதா, முனைவர் தமிழ்க்குடிமகன் ஆகியோரும் இடம்பெற்றோம். இனிய வரலாற்று நிகழ்வை இயம்பும் இந்தப் படம், நினைத்தாலே இனிக்கும்.

**- முனைவர் கடவூர் மணிமாறன்,**
**கரூர் மாவட்ட இலக்கிய அணி மேனாள் தலைவர்,**
**குளித்தலை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மக்கள் ஆதரவு சர்வாதிகார ஆட்சிக்கா?

1938-ஆம் ஆண்டின், பிப்ரவரி 13 ‘குடிஅரசு’ இதழில், ராஜாஜி அவர்களின் ஆட்சியை விமர்சித்து, பேரறிஞர் அண்ணா எழுதுகையில், “பொதுஜனம் எங்களை ஆதரிக்கிறது, அவர்கள் தந்த ஓட்டுகளே எமக்குப் பதவியைத் தந்தன என ஆச்சாரி வர்க்கம் கூறுகிறது. அவருடைய உடுக்கைகளும் இந்தப் பல்லவியையே ஒலிக்கின்றன. ஆனால், இதன் உண்மை என்ன? பொது ஜனம் இவரையும் இவரது கோஷ்டியையும் ஆதரித்தது எதற்கு? இந்த சர்வாதிகார ஆட்சிக்கா? அவரை அன்று ஆதரிக்காத பொது ஜனங்களே இல்லையா? அவரை எதிர்த்து ஓட்டளித்தவர்களும் இன்றும் வேண்டாத ஆட்சியின் கீழ் இருக்கிறார்கள்” என்று விமர்சனம் செய்திருந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900